**பூஜாபிடிய பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூஜாபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 66,393,616 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருடத்தை காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 5,514,467 ஆக காணப்பட்டது.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 63,124,976 இற்கான செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதியில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,387,479 ஆகும்.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| 2003 ஏப்ரல் 11 திகதிய இலக்கம் சீபீசீ/சீஎல்/06/06/02 கொண்ட மத்திய மாகாண சபை பிரதான செயலாளரின் சுற்று நிருபம் | I. சபையில் கடமையாற்றும் 11 அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் கூட்டுத்தொகை ரூபா 25,000 இற்கான பிணைத் தொகை பெற்றிருக்கவில்லை.<br>II. கணக்கு அலுவலரின் பேரில் பேணப்படும் பொறுப்பு தாபன தலைவரிடம் இருக்க வேண்டிய ரூபா 26,250 பெறுமதியான 11 கணக்கு மீதிகளின் பெறுமதி 2014 திசெம்பர் 31 திகதி வரை தாபன தலைவரின் பொறுப்பிற்கு ஆக்கியிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,162,253 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,846,061 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,683,808 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரின் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ள வாறு | ஆண்டின் போது சிட்டை இடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதியில் அறவிடப் படாத தொகை | 2014 சிட்டை இடப்பட்ட வருமானத் தில் அறவிடப் படாத தொகை | அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2014.01.01 திகதி உள்ளவாறு நிலுவையாக சேகரித்த வருமானம் | 2014 ஆண்டின் போது சிட்டை யிடப்பட்ட வருமான த்தில் சேகரித்த வருமானம் | | | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி மற்றும் வரி | 1,705,176 | 2,918,230 | 626,186 | 1,622,908 | 1,078,990 | 1,295,322 | 2,374,312 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | 2,480,000 | - | 1,901,340 | - | 578,660 | 578,660 |
| வாடகை (இறைச்சி, மீன், கடை) | 312,575 | 997,700 | 278,000 | 789,375 | 34,575 | 208,325 | 242,900 |
| ஏனையவை | 2,604,746 | 9,787,731 | 2,401,663 | 2,997,230 | 203,083 | 6,790,501 | 6,993,584 |
| | 4,622,497 | 16,183,661 | 3,305,849 | 7,310,853 | 1,316,648 | 8,872,808 | 10,189,456 |

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 10,189,456 ஆகும்.

2.2.2 வீத வரி

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 1,705,176 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன் ஆண்டிற்கான சிட்டை இடப்படல் ரூபா 2,918,230 ஆகும். ஆண்டின் போது அறவிடப்பட்ட சதவீதம் சுமார் நூற்றிற்கு 57 ஆக காணப்பட்டமையால், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 2,374,312 ஆக காணப்பட்டது. அம் மீதியில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள மீதிகளின் பெறுமதி ரூபா 1,078,990 ஆகும்.

2.2.3 வாடகை

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் செயற்பட்டு பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தில் கேடீ/ஆர்பீ/3536 மற்றும் 2015 மார்ச் 02 திகதிய கடிதத்தின் மூலம் அம்பதென்ன வர்த்தக தொடர் கட்டிடத்தின் கடைகளின் வாடகை திருத்தப்பட்டிருந்தது. புதிய பெறுமதி மதிப்பீட்டு பெறுமதியை செயற்படுத்தாமல் இருப்பதற்கு 2015 மார்ச் 12 திகதி கூடிய பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மாதாந்தம் ரூபா 29,450 வீதம் ரூபா 353,400 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 242,900 இற்கான வாடகை நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் அம் மீதியில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த மீதி ரூபா 34,575 ஆகும். இந்த நிலுவை வாடகைக்கு அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கை ஒன்றினை கடைபிடித்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 400,000 தொகையும் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,593,584 பெற வேண்டிக் காணப்பட்டது. அம் மீதிகளின் நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 38,422 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,000,000 தொகை 2015 ஜுன் 30 திகதி அளவில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.5 ஏனைய வருமானங்கள்

---

மீளாய்வாண்டின் போது பெக்கோ இயந்திரம் வாடகை கொடுத்ததன் மூலம் பெற வேண்டிய ரூபா 342,700 தொகையில் ரூபா 52,800 தொகை 2015 ஜுன் 30 திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 வருடங்களை விட பழமை வாய்ந்த ரூபா 473,092 தொகை பெறுமதியான 05 வருமானக் கடன்பட்டோர் மீதிகள் மற்றும் செலவுக் கடன்கொடுத்தோர் மீதியொன்றும் காணப்பட்ட போதிலும் இந்த மீதியை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---

சபைக்குச் சொந்தமான வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கராஜ் ஒன்று சபையில் காணப்படாமையால் சபையில் இருந்து சுமார் 01 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள தனிப்பட்ட காணி ஒன்றில் வெயில் மழை இரண்டிற்கும் பாதுகாப்பற்ற முறையில் சபையின் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2002 மார்ச் 18 ஆந் திகதி ரூபா 85,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த குப்பைகளைத் துண்டுகளாக்கும் இயந்திரம் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் கடன் கணக்காய்வு அறிக்கையின் மூலம் தொடர்ந்தும் சுட்டிக் காட்டியிருந்த போதிலும் இது வரை அவ் இயந்திரம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 968,000 தொகை பெறுமதியான 02 டிரக்டர்கள் மற்றும் டேலர்கள் 5 வருடங்களை விட மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

---

அங்கும்புர கொடமடித்த – கித்துல்கொல்ல பாதையை அபிவிருத்தி செய்தல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 490,000

---

2015 பெப்ரவரி 16 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

I. 1:2:4 (3/4) கொங்கிரீட் கலவையினை 4'' கனத்திற்கு கொங்கிரீட் பண்ணப்பட வேண்டிய பாதையின் மேற் பகுதியின் பல இடங்களை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது அதனது கனம் 3'6'' ஆக காணப்பட்டது. இதன் பிரகாரம் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக 0.897 கியூப்களுக்காக ரூபா 45,121 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

II. தொழிநுட்ப அலுவலரின் கூற்றுக்களின் பிரகாரம் போடப்பட்டிருந்த கொங்கிரீட் கலவை மிகவும் பலவீன மட்டத்தில் காணப்பட்டதுடன் ஒட்டு மொத்தமாக குறிப்பிட்ட பாதையை மதிப்பிடப்பட்ட

நியமங்களுக்கு மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமக் குறியீடுகளுக்க இணங்க மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்
---------------------------------------------------------------------

4.1 பெறுகைகள் திட்டம்
---------------------------------

ரூபா 108,709,436 இற்கான மூலதன செலவு ஒன்றினை சபை மேற்கொண்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு
-------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 04 வருமான விடயங்களில் நூற்றிற்கு 18 முதல் நூற்றிற்கு 25 வரையும், 03 செலவு விடயங்களில் நூற்றிற்கு 64 முதல் நூற்றிற்கு 100 இனை மிகைத்தும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்
------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்